ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஸ்ரீ பாதுகாசேவக ராமாநுசமகாதேசிகன் (சின்னாண்டவன்) வாழித்திருநாமம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஸ்ரீ பாதுகாசேவக ராமாநுசமகாதேசிகன் (சின்னாண்டவன்) வாழித்திருநாமம்

நமஸ்தஸ்மை ஸ்ரீநிவாஸ மஹாதே$_3$ஶிகயோகி$_3$நே।
ஸ்ரீமச்ச்$_2$ரீவாஸராமாநுஜாத்த ஸார்வஜ்ஞஶாலிநே॥

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யோகீ$_3$ந்த்$_3$ர த$_3$யாபாத்ரம் த$_3$யாநிதி$_4$ம்।
வந்தே$_3$ ஸ்ரீபாது$_3$காஸேவி ராமாநுஜயதீஶ்வரம்॥

வாழி திருவரங்க மாநகர்சீர் மாதகவால்
பாதூசேவி மாமுனி தாள் - வாழியவே வேதநான்கும்
தென் மொழியின் வேதமுடன் வாழியவே
தீதற்ற நல்லோர் திரள்

பற் பல கலைவல்லப் பத்தருகந்தோன் வாழி
பற் பல நூலால் உலகளித்த வள்ளல் வாழி
கற்றவர் காமுறுவர் நற்சீலன் வாழி
நற்றவர் போற்றுமெங்குலபதி வாழியே

காசினியோர் தாம் வாழக் கார்த்திகையில் மகத்துதித்தோன் வாழி
தேசுடைமாவாச யோகித்தாளிணை அடைந்தோன் வாழி
மாசின் மனந்தெளிமுனிவர் வகுத்ததைத் தீதறவறிந்தோன் வாழி
மாலுகந்த வாசிரியர் மாமொழியை மாசறயுணர்ந்தோன் வாழி
வீசு புகழ் நற்றமிழ் மறைப்பொருள் விரித்துரைத்தோன் வாழி
தீதலா வேதமௌளி தேசிகனாருரைச் சுவடறிந்தோன் வாழி

மாசதிரெதிராசன் பாசியமாகடற்றலமறிந்தோன் வாழி
பாதுகைசேவி ராமாநுசமுனி வாழி நீடுழியே

வேத மனைத்தும் வாழ வேதியர் தாம் வாழ
வேதாந்த தேசிகனார் - கோதற்ற
நன்னூல் வாழ பாதுகைசேவி ராமாநுச முனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்

## திருநாள் பாட்டு

யதிவரனார் சினமற்றுச் சென்னி அசைத்திடுநாள்
ஆகமமௌளியாசிரியனின்பமடைந்திடுநாள்
வாதியர் தாம் வாழ்ச்சியற்றுத் திகைத்திடுநாள்
மும்முனிவர் மதமோங்கித் தழைத்திடுநாள்
கோதிலா நற்றமிழ் மறைத்தாரணியில் தரித்திடுநாள்
திருவுடனமர்ந்தரங்கன் திருவுரைகேட்டுமகிழ்ந்திடுநாள்
பாதுகைசேவி ராமாநுச முநியுதித்திடுநாள்
மேதினியோருய்யக் கார்த்திகையில் மகமாம் திருநாளே

ஸ்ரீ பாதுகாசேவக ராமாநுசமகாதேசிகன் வாழித்திருநாமம் முற்றிற்று